# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.342/2024

நாள்: 01.08.2026

வா.சா. 1– ராஜராஜசோழன் (எ) பிரசாத்

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் 01–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தந்தை 2011 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இறந்தார். என் தந்தை வழி தாத்தா ராஜமாணிக்கம் 2000 ஆம் ஆண்டு இறந்தார். மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துகளுக்கு வழக்கு போட்டுள்ளேன் என்றால் 7 அயிட்ட சொத்துகள். தாவா சொத்துகளை பிரதிவாதி தான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு தாவா சொத்துகளுக்கு போகவில்லை. 2 முதல் 4, 6 மற்றும் 7 வது அயிட்ட சொத்துகள் என் தாத்தா ராஜமாணிக்கம் கிரயம் வாங்கிய சொத்துகள் என்றால் தெரியாது. தாவா 1 மற்றும் 5 அயிட்ட சொத்துகள் பூர்வீக சொத்துகள் என்றால் சரிதான். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்துகள் 01.11.1982–ல் பாக அட்டவணை மூலம் கிடைக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பாக அட்டவணை என் தந்தைக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டது. பாக அட்டவணை ஏற்பட்ட காலத்தில் என் தாத்தா ராஜமாணிக்கம் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். பாக அட்டவணையில் என் தாத்தா தரப்பினர் இல்லை என்றாலும் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரிதான். பாக அட்டவணையில் உள்ள சொத்துகள் என் தாத்தாவுக்கு பூர்வீகமாகவும், கிரையமாகவும் கிடைத்த சொத்துகள் என்றாலும் அவரை இல்லாமல் எனது தந்தையும் பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட பாக அட்டவணை செல்லாது என்றாலும் பாக

அட்டவணை நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் அதன் படி என் தந்தை தாவா சொத்துகளை அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட பாக அட்டவணையின் படி தாவா சொத்துக்களில் நாங்கள் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தின் கீழ் பாதி எனது தந்தைக்கு பாகமாகவும், அதே சொத்தில் கீழ் பாதி பிரதிவாதிக்கு பாகமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 4 வது அயிட்ட சொத்தின் தென் பாதி எனது தந்தைக்கு பாகமாகவும், அதே சொத்தில் தென் பாதி பிரதிவாதிக்கு பாகமாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 4 வது அயிட்ட சொத்துகள் பாக அட்டவணையில் தவறாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் 2 மற்றும் 4 வது அயிட்ட சொத்துகள் தவறாக உள்ளதாக IA.3/2025 அபிடவிட்டில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாக அட்டவணையில் உள்ள 2 மற்றும் 4 அயிட்ட சொத்துகள் தவறாக உள்ளதாக நான் ஒப்புக்கொண்டுள்ளதால் அந்த பாக அட்டவணை செல்லாது என்றாலும் பாக அட்டவணை நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் அதன் படி என் தந்தை தாவா சொத்துகளை அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட பாக அட்டவணையின் படி தாவா சொத்துக்களில் நாங்கள் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துகளை பொறுத்து நாங்கள் ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.323/2012-ல் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா சொத்துகள் எங்கள் அனுபவித்தில் உள்ளதாகவும் பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருந்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கை முழுமையாக விசாரித்த விசாரணை நீதிமன்றம் தாவா சொத்துகளின் அனுபவம் பிரதிவாதியிடம் இருப்பதாக தீர்மானித்து வழக்கை தள்ளுபடி செய்துள்ளது

என்றால் சரிதான். வழக்கு தள்ளுபடியான பிறகு அதே நீதிமன்றத்தில் மீண்டும் விளம்புகை மற்றும சுவாதீன பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.123/2020 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தான் தற்போதைய வழக்கு என்றால் சரிதான். நான் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்துவிட்டதால், அதே சொத்து மற்றும் சங்கதிகளை கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கானது முன் தீர்ப்பு தடை கோட்பாட்டால் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்ட சொத்தில் பிரதிவாதி ஆழ்துளை கிணறு அமைத்து பிரதிவாதி பெயரில் 2005 ஆம் ஆண்டு மின்இணைப்பு பெற்று பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். 3 வது அயிட்ட சொத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து இதர சொத்துகளுக்கு பைப் லைன் அமைத்து தாவா சொத்துகளுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துகளை 50 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் பாக அட்டவணை செல்லாது என்றாலும் தாவா தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல. நாங்கள் நீதிமன்றத்தை தூய கரங்களோடு அனுகவில்லை என்றாலும் தவறான சங்கதீகளை கூறி வழக்கு போட்டுள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.